வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்
ந.க. எண். 3898/ஆ2/2024 நாள் : .09.2025

பொருள்: பள்ளிக் கல்வி - 2025-26- PM YASASVI -TOP CLASS SCHOOL EDUCATION SCHOLARSHIP SCHEME -OBC, EBC and DNT இனத்தை சார்ந்த 9 மற்றும் 11 ஆம் வகுப்பு கல்வி உதவித்தொகை பெறத் தகுதியான மாணவ /மாணவியரின் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் National Scholarship Portal இணையதளத்தில் புதிதாக பதிவேற்றம் மற்றும் Renewal செய்யும் பணிகளை முடிக்க தெரிவித்தல் -சார்பு .

பார்வை: சென்னை-05, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையரின் கடித ந.க.எண். டி1/9088/2025 நாள்: 22.09.2025.

-----

பார்வையில் காணும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையரின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, 2025-26 ஆம் ஆண்டு PM YASASVI -TOP CLASS SCHOOL EDUCATION SCHOLARSHIP SCHEME -திட்டத்தின் கீழ் OBC , EBC and DNT இனத்தை சார்ந்த இணைப்பில் உள்ள பள்ளிகளில் கல்வி உதவித்தொகை பெறத் தகுதியான 9 மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும், மாணவ /மாணவியர்கள் National Scholarship Portal (http://scholarships.gov.in) என்ற இணையதள முகவரியில் புதிதாக விண்ணப்பிக்கவும் மேலும், கடந்த நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவ/மாணவியர்கள் தங்களது விண்ணப்பங்களை புதுபித்தல் (Renewal) செய்யும் பணிகளை 15.10.2025-க்குள் முடிக்க வேண்டும் என சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. மாணவ/மாணவியர்கள் இதரபிற்படுதப்பட்டோர் (OBC), பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் (EBC), சீர்மரபினர் (DNT) பிரிவில் இருத்தல் வேண்டும்.
2. மாணவ /மாணவியரின் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 லட்சம் ஆகும்.
3. இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் முறையே 8 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் 60 சதவீதம் மற்றும் அதற்கும் அதிகமாக மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.
4. இத்திட்டத்தின் கீழ் புதிதாக விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு NSP இணையதளத்தில் ஒரு முறை பதிவு (One Time Registration-OTR) மேற்கொள்ள வேண்டும்.
5. ஏற்கனவே OTR எண் பெற்றவர்கள் NSP இணையதளத்தில் கல்வி உதவித் தொகைக்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம்.
6. **இத்திட்டதின் கீழ் மாணவர்கள் விண்ணப்பிக்க கடைசி நாள்: 15.10.2025.**

இப்பணி குறித்து இனிவரும் காலங்களில் ஏதேனும் புகார் பெறப்பட்டால், அப்பள்ளித் தலைமையாசிரியர்களே முழுப்பொறுப்பேற்க நேரிடும் என்பதை திட்ட வட்டமாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை /தனியார் பள்ளிகள்) 31.10.2025 அன்று பள்ளிகள் வாரியாக பதிவுகள் மேற்கொண்ட விவரத்தினை இவ்வலுவகத்தில் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

1. பள்ளிகளின் பெயர் பட்டியல்.
2. NSP இணைய வழியில் மாணவர்கள் பதிவுகள் மேற்கொள்ள வழிகாட்டு காணொளி.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்.

**பெறுநர்**

சார்ந்த உயர் /மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள், மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

**நகல்**

வேலூர், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள்)
தொடர் நடவடிக்கையின் பொருட்டு (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)